**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்**

முன்னிலை : **திரு. ப. சரவணன், பி.எல்.,**

கூடுதல் மாவட்ட நீதிபதி, திண்டுக்கல்

2022–ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 12–ஆம் நாள் வெள்ளிக் கிழமை

**அசல் வழக்கு எண். 383/2021**

**CNR. No. TNDG01-005448-2021**

1. செல்வராணி
2. ரேவதி
3. பானு ... வாதிகள்

/எதிர்/

1. செல்லம்மாள்
2. அனிதா
3. அருள்முருகன்
4. பி.டி. சுவாமிநாதன்
5. பொ. கந்தசாமி
6. பொ. சாமியாத்தாள்
7. நல்லசாமி கவுண்டர் ... பிரதிவாதிகள்

இவ்வழக்கானது 10.08.2022–ஆம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன் விசாரணைக்கு வந்தபோது, வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு. எஸ். செல்வகுமார் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் அழைத்து ஆஜராகாததால் தோன்றாத் தரப்பினராக்கப்பட்டும், வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டும், ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**<u>தீர்ப்புரை</u>**

இவ்வழக்கானது,

1) தாவா 'எ' அட்டவணை சொத்துக்களில் வாதிகளுக்கு 1/2 பாகம் பிரித்துக் கொடுக்கும்படி ஒரு முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்க வேண்டியும், அதன் அடிப்படையில் சொத்தின் சுவாதீனத்திற்காக இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்க வேண்டியும்,

2) தாவா 'பி' அட்டவணை சொத்துக்கள் 1–ஆம் வாதிக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை வேண்டியும், அதன் தொடர்ச்சியாக தாவா 'பி' அட்டவணை சொத்துக்களை 1–ஆம் வாதி அனுபவித்து வருவதை பிரதிவாதிகள் தடை செய்யாதிருக்கும் வண்ணம் ஒரு நிரந்தர உறுத்துக் கட்டளை வேண்டியும்,

3) 1–ஆம் பிரதிவாதியின் கணவர் நல்லச்சாமி கவுண்டர், 2 மற்றும் 3 பிரதிவாதிகளுக்கு 24.08.2021 அன்று எழுதிக் கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரம் செல்லத்தக்கதல்ல என விளம்புகை வேண்டியும்,

4) 2 மற்றும் 3 பிரதிவாதிகள், 4–ஆம் பிரதிவாதிக்கு 25.08.2021 அன்று எழுதிக் கொடுத்த கிரையப் பத்திரம் செல்லத்தக்கதல்ல என விளம்புகை வேண்டியும்,

5) 1–ஆம் பிரதிவாதியின் கணவர் நல்லச்சாமி கவுண்டர் 2 மற்றும் 3 பிரதிவாதிகளுக்கு 06.09.2021 அன்று எழுதிக் கொடுத்த கிரையப் பத்திரம் செல்லத்தக்கதல்ல என விளம்புகை வேண்டியும் மற்றும் செலவு தொகைக்காகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2. வாதிகள் தாக்கல் செய்த வழக்குரையின் சாராம்சம் :</u>**

வாதிகள், பிரதிவாதிகளின் உறவுமுறையை எடுத்துரைக்க கொடிவழி ஜாப்தா தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா 'எ' அட்டவணை சொத்துக்கள், செல்லப்ப கவுண்டருக்கு 24.04.1965–ல் நடைபெற்ற பாகப்பிரிவினையில் கிடைத்த சொத்துக்களாகும். செல்லப்ப கவுண்டருக்கு நல்லச்சாமி கவுண்டர், ராமசாமி கவுண்டர் என இரண்டு மகன்கள். நல்லச்சாமி கவுண்டரின் மனைவி 1–ஆம் பிரதிவாதி செல்லம்மாள். நல்லச்சாமி கவுண்டரின் மகன் பழனிச்சாமி, மகள் குப்பாத்தாள்.

பழனிச்சாமியின் வாரிசுதாரர்கள் 1 முதல் 3 வாதிகள். குப்பாத்தாளின் மகன் மற்றும் மகள் இந்த வழக்கில் 2 மற்றும் 3 பிரதிவாதிகள். பழனிச்சாமி உயிருடன் இருக்கும்போதே 20.01.1995–ல் பழனிச்சாமி மற்றும் நல்லச்சாமி கவுண்டருக்கு இடையே வாய்மொழியாக பாகப்பிரிவினை நடைபெற்றது. அதன்பிறகு பழனிச்சாமி ஆந்திரா சென்று சுய சம்பாத்தியத்தில், தாவா 'பி' அட்டவணை சொத்துக்களை கிரையம் பெற்று, 1–ஆம் பிரதிவாதிக்கு 12.04.2008 அன்று உயில் எழுதி வைத்துள்ளார். பழனிச்சாமி, 19.04.2012 அன்று இறந்துவிட்டார். தாவா 'எ' அட்டவணை சொத்துக்களில் மற்றும் 'பி' அட்டவணை சொத்துக்களில் உள்ள வாதிகளின் உரிமைக்கு மாறாக, நல்லச்சாமி கவுண்டர் செயல்பட்டு, 2 மற்றும் 3 பிரதிவாதிகளின் பெயர்களில் தான செட்டில்மெண்ட் பத்திரம், கிரையப் பத்திரங்கள் எழுதிக் கொடுத்துள்ளார். அவை எதுவும் வாதிகளின் உரிமையை கட்டுப்படுத்தாது. ஆகவே, தாவா 'எ' அட்டவணை சொத்துக்களைப் பொறுத்து பாகப்பிரிவினை பரிகாரம் வேண்டியும், தாவா 'பி' அட்டவணை சொத்துக்களைப் பொறுத்து விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை வேண்டியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் அழைத்து ஆஜராகாததால் தோன்றாத் தரப்பினர்களாக்கப்பட்டுள்ளனர்.

4. வாதிகள் தரப்பில் வா.சா.1 முதல் வா.சா.4 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.19 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

5. <u>**தீர்விற்குரிய பிரச்சனை :**</u>

இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், வாதிகள் இவ்வழக்கில் கோரியுள்ளவாறு தாவா 'எ' அட்டவணை சொத்துக்களைப் பொறுத்து பாகப்பிரிவினை பரிகாரமும், தாவா 'பி' அட்டவணை சொத்துக்களைப் பொறுத்து விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரமும், 24.08.2021 தேதியிட்ட தான செட்டில்மெண்ட் பத்திரமும், 25.08.2021 தேதியிட்ட கிரையப் பத்திரமும், 06.09.2021 தேதியிட்ட கிரையப் பத்திரமும் செல்லத்தக்கதல்ல என்ற விளம்புகை

பரிகாரமும் வாதிகளுக்கு கிடைக்கக் கூடியதா? இல்லையா? என்பதேயாகும்.

6. **<u>தீர்வு :</u>**

1–ஆம் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். வாதிகள் மற்றும் பிரதிவாதிகளுக்கு இடையே உள்ள உறவுமுறைகளை எடுத்துரைக்க வா.சா.ஆ.1 கொடி வழி ஜாப்தா தாக்கல் செய்யப்பட்டுள்ளது. செல்லப்பக் கவுண்டருக்கு, தாவா 'எ' அட்டவணை சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என்பதை எடுத்துரைக்க வா.சா.ஆ.2 பாகப்பிரிவினை ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. செல்லப்பக் கவுண்டரின் மகன்கள் நல்லச்சாமி கவுண்டர், ராமசாமி கவுண்டர். ராமசாமி கவுண்டரின் மனைவி செல்லம்மாள், தனக்கு சொத்துக்களில் பாகம் தேவையில்லை என எழுதிக் கொடுத்த விடுதலை பத்திரம் வா.சா.ஆ.3. நல்லச்சாமி கவுண்டருக்கும், ராமசாமி கவுண்டருக்கும் இடையே 20.01.1995–ல் வாய்மொழியாக பாகப்பிரவினை நடைபெற்றுள்ளது என்பது வாதிகளின் வழக்காகும். மேற்படி பாகப்பிரிவினையை எடுத்துரைக்க வா.சா.4 விசாரிக்கப் பட்டுள்ளார். மேற்படி பாகப்பிரிவினைக்கு பிறகு வா.சா.ஆ.4 முதல் வா.சா.ஆ.6 வரையான ஆவணங்களின்படி தாவா 'பி' அட்டவணை சொத்துக்களை பழனிச்சாமி கிரையம் பெற்று, அந்த சொத்துக்களைப் பொறுத்து பழனிச்சாமி 1–ஆம் வாதியின் பெயருக்கு எழுதி வைத்த உயில் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.7–ல் சாட்சி கையொப்பமிட்டவர்கள் இந்த வழக்கில் வா.சா.2 மற்றும் வா.சா.3 ஆக விசாரிக்கப்பட்டு, உயில் நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆக, தாவா 'பி' அட்டவணை சொத்துக்கள் 1–ஆம் வாதிக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை செய்யப்படுகிறது.

7. 20.01.1995–ல் வாய்மொழியாக பாகப்பிரிவினை ஏற்பட்டிருந்தாலும், பழனிச்சாமி காலமானபிறகு, நல்லச்சாமி கவுண்டர் வாதிகளின் நலனுக்கு விரோதமாக செயல்பட்டதாக வாதிகளின் தரப்பில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. நல்லச்சாமி கவுண்டர் 2 மற்றும் 3 பிரதிவாதிகளின் பெயருக்கு எழுதிக் கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரம் வா.சா.ஆ.9 ஆகவும், அதன் அடிப்படையில் 2 மற்றும் 3 பிரதிவாதிகள், 4–ஆம்

பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த கிரையப் பத்திரம் வா.சா.ஆ.10 ஆகவும், 2 மற்றும் 3 பிரதிவாதிகளுக்கு நல்லச்சாமி கவுண்டர் எழுதிக் கொடுத்த கிரையப் பத்திரத்தின் நகல் வா.சா.ஆ.11 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளன. சொத்துக்களுக்கான பட்டா மற்றும் கிஸ்தி ரசீதுகள், வில்லங்கச் சான்றிதழ்கள் வா.சா.ஆ.14 முதல் வா.சா.ஆ.17 வரையான ஆவணங்களாக குறியீடு செய்யப்பட்டுள்ளன. வா.சா.1–ன் சாட்சியத்திற்கு மாறுபட்ட விதத்தில் வேறு சாட்சியங்கள் எதுவும் இல்லை. மேற்கூறிய காரணங்களால், வாதிகள் கோரிய தாவா 'எ' அட்டவணை சொத்துக்களைப் பொறுத்து பாகப்பிரிவினை பரிகாரமும், தாவா 'பி' அட்டவணை சொத்துக்களைப் பொறுத்து விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரமும், 24.08.2021 தேதியிட்ட தான செட்டில்மெண்ட் பத்திரமும், 25.08.2021 தேதியிட்ட கிரையப் பத்திரமும், 06.09.2021 தேதியிட்ட கிரையப் பத்திரமும் செல்லத்தக்கதல்ல என்ற விளம்புகை பரிகாரமும் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என இந்த பிரச்சனைக்கு இந்நீதிமன்றம் விடை காண்கிறது.

முடிவாக,

1) தாவா 'எ' அட்டவணை சொத்துக்களில் வாதிகளுக்குரிய 1/2 பாகத்தை பிரதிவாதிகள் இன்றிலிருந்து மூன்று மாத காலத்திற்குள் பிரித்துக் கொடுக்கும்படி ஒரு முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பித்தும், அதன் அடிப்படையில் பிரதிவாதிகள் பாகம் பிரித்துக் கொடுக்கத் தவறும்பட்சத்தில் சொத்தின் சுவாதீனத்திற்காக இறுதிநிலை தீர்ப்பாணைக்கு வாதிகள் மனு செய்து கொள்ள அனுமதியளித்தும்,

2) தாவா 'பி' அட்டவணை சொத்துக்கள் 1–ஆம் வாதிக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை செய்து, அதன் தொடர்ச்சியாக தாவா 'பி' அட்டவணை சொத்துக்களை 1–ஆம் வாதி அனுபவித்து வருவதை பிரதிவாதிகள் எவ்விதத்திலும் தடை செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக் கட்டளை பிறப்பித்தும்,

3) 1–ஆம் பிரதிவாதியின் கணவர் நல்லச்சாமி கவுண்டர், 2 மற்றும் 3 பிரதிவாதிகளுக்கு 24.08.2021 அன்று எழுதிக் கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரம் செல்லத்தக்கதல்ல என விளம்புகை செய்தும்,

4) 2 மற்றும் 3 பிரதிவாதிகள், 4–ஆம் பிரதிவாதிக்கு 25.08.2021 அன்று எழுதிக்

கொடுத்த கிரையப் பத்திரம் செல்லத்தக்கதல்ல என விளம்புகை செய்தும்,

5) 1–ஆம் பிரதிவாதியின் கணவர் நல்லச்சாமி கவுண்டர் 2 மற்றும் 3 பிரதிவாதிகளுக்கு 06.09.2021 அன்று எழுதிக் கொடுத்த கிரையப் பத்திரம் செல்லத்தக்கதல்ல என விளம்புகை செய்தும் தீர்ப்பளிக்கப்படுகிறது.

6) உபயதரப்பினர்களின் உறவுமுறையை கருத்தில் கொண்டு அவரவர்கள் செலவு தொகையை அவரவர்களே ஏற்றுக் கொள்ள வேண்டுமெனவும் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் எழுதி, விரிவாக்கம் செய்து கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து பிழைத்திருத்தி இன்று 2022–ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 12–ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P SARAVANAN Digitally signed by P SARAVANAN Date: 2022.08.12 14:38:48 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
திண்டுக்கல்.

**1. வாதி தரப்பு சாட்சி :**

வா.சா.1 – செல்வராணி

வா.சா.2 – சக்திவேல்

வா.சா.3 – ஈஸ்வரன்

வா.சா.4 – செல்லமுத்து

**2. வாதி தரப்பு சான்றாவணங்கள் :**

1. வா.சா.ஆ.1– கொடிவழி ஜாபிதா அசல்.
2. வா.சா.ஆ.2– 24.04.1965 ம் தேதி 1ம் பிரதிவாதியின் மாமனார் குடும்பத்திற்குள் ஏற்பட்ட பாகப்பிரிவினை ஆவணம் இணைய நகல்.
3. வா.சா.ஆ.3– 24.02.1971 ம் தேதி 1ம் பிரதிவாதியின் கணவருடன் பிறந்த சகோதரர் லேட்.ராமசாமி கவுண்டரின் மனைவி செல்லம்மாள் எழுதிக் கொடுத்த விடுதலை ஆவணம் கணினி நகல்.

4. வா.சா.ஆ.4– 30.01.1993 ம் தேதி 1 ம் வாதியின் கணவரும், 2,3 வாதிகளின் தகப்பனாருமான லேட்.பழனிச்சாமி பெற்ற கிரைய ஆவணம் அசல்.

5. வா.சா.ஆ.5– 23.05.1994 ம் தேதி 1 ம் வாதியின் கணவரும், 2,3 வாதிகளின் தகப்பனாருமான லேட்.பழனிச்சாமி பெற்ற கிரைய ஆவணம் அசல்.

6. வா.சா.ஆ.6– 07.06.2000 ம் தேதி 1 ம் வாதியின் கணவரும், 2,3 வாதிகளின் தகப்பனாருமான லேட்.பழனிச்சாமி பெற்ற கிரைய ஆவணம் அசல்.

7. வா.சா.ஆ.7– 12.04.2008 ம் தேதி 1 ம் வாதியின் கணவரும், 2,3 வாதிகளின் தகப்பனாருமான லேட்.பழனிச்சாமி எழுதிக் கொடுத்த உயில் ஆவணம் அசல்.

8.வா.சா.ஆ.8– 31.01.2013 ம் தேதி வாதிகளும், 1 ம் பிரதிவாதியின் கணவரும் சேர்ந்து எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் கணினி நகல்.

9.வா.சா.ஆ.9– 24.08.2021 ம் தேதி 1 ம் பிரதிவாதியின் கணவர்,2,3 பிரதிவாதிகளுக்கு எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட் ஆவணம் கணினி நகல்.

10. வா.சா.ஆ.10– 25.08.2021 ம் தேதி 4 ம் பிரதிவாதிக்கு,2,3 பிரதிவாதிகள் எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் கணினி நகல்.

11. வா.சா.ஆ.11– 06.09.2021 ம் தேதி 1 ம் பிரதிவாதியின் கணவர்,2,3 பிரதிவாதிகளுக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் கணினி நகல்.

12. வா.சா.ஆ.12– 19.04.2012 ம் தேதி 1 ம் வாதியின் கணவரும்,2,3 வாதிகளின் தகப்பனாருமான லேட்.பழனிச்சாமியின் இறப்புச்சான்று புகைப்பட நகல்.

13. வா.சா.ஆ.13– 05.06.2012 ம் தேதி 1 ம் வாதியின் கணவரும்,2,3 வாதிகளின் தகப்பனாருமான லேட்.பழனிச்சாமியின் வாரிசுச்சான்று புகைப்பட நகல்.

14. வா.சா.ஆ.14– 19.10.2021 ம் தேதி பட்டா (6) பட்டா எண்கள்:1168,1872,2162,607,608,486 கணினி நகல்.

15. வா.சா.ஆ.15– 13.11.1992 ம் தேதி பட்டா (1) பட்டா எண்:275 அசல்.

16. வா.சா.ஆ.16– கிஸ்தி ரசீதுகள் (2) அசல்.

17. வா.சா.ஆ.17– 19.10.2021 ம் தேதி வில்லங்கச் சான்று கணினி நகல்.

18. வா.சா.ஆ.18– 19.10.2021 ம் தேதி வழிகாட்டி மதிப்பீடு கணினி நகல்.

19. வா.சா.ஆ.19– வாதிகளின் குடும்ப அட்டை நகல்.

P SARAVANAN Digitally signed by P SARAVANAN Date: 2022.08.12 14:39:01 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,

திண்டுக்கல்.

Additional District Court,

Dindigul.

O.S. No. 383/2021

Judgment : FAIR

Dated: 12.08.2022